**சாதாரண கூட்டம் நாள் 28.02.2022**

**திருமங்கலம் நகராட்சி**

## மன்றப்பொருள்

1)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.6,7,8,9,14 மற்றும் இதரப் பகுதிகளில் தனியார் மூலம் 80 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள ஏ.வி.எம்.சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு 31.03.2022 அன்று ஒப்பந்தகாலம் முடிவடைவதால் பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை காலநீட்டிப்பு செய்து தர துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு அலுவலர் கோரி உள்ளதால் ஏற்கனவே வழங்கப்பட்ட பழைய ஒப்பந்த விகிதத்தின்படி பணிமேற்கொள்ள ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நாள் வரை காலநீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தைக் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் காலம் வரை காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2396:** **அனுமதிக்கப்பட்டது.**

2)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பணியாளர்களைக் கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.1533/2016/அ2, நாள் 28.12.2018ன்படி ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனம் மூலம் 60 பணியாளர்களைக் கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தகாலம் 31.12.2021 அன்றுடன் முடிவடைவதால் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1533/2016/அ2–ன்படி மூன்று மாத காலத்திற்கு 31.03.2022 வரை பணிநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. துப்புரவு ஆய்வர்கள் மற்றும் துப்புரவு அலுவலர் டெங்கு தடுப்புப் பணிகள் அத்தியாவசியப் பணியாக உள்ளதால் நகரின் பொதுமக்களின் நலத்தினை கருத்தில் கொண்டு 01.04.2022 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை 35 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த கோரியுள்ளார்கள். ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்து வழங்கக் கோரியுள்ளார்கள். தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 01.04.2022 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட், இராஜபாளையம் நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு (01.04.2022 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை) செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2397:** **அனுமதிக்கப்பட்டது.**

3)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, 22, 23, 24, 25, 26, 27 பகுதிகளில் தனியார் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள ஜெய் ஷீரடி சாய்மேன்பவர் ஏஜென்ஸி மூலம் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.2595/2018/அ2, நாள் 08.03.2019ன்படி 69 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொள்ள அனுமதித்து 25.03.2019 முதல் 24.03.2022 வரை 3 வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த கால 24.03.2022 அன்றுடன் முடிவடைவதால் இந்நகராட்சி துப்புரவு ஆய்வர்கள் மற்றும் துப்புரவு அலுவலர் பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியப் பணியாக உள்ளதால் 01.04.2022 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை காலநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கக் கோரி உள்ளார்கள். தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஜெய் ஷீரடி சாய்மேன்பவர் ஏஜென்ஸி, மதுரை நிறுவனத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை காலநீட்டிப்பு செய்ததையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2398:** **அனுமதிக்கப்பட்டது.**

4)திருமங்கலம் நகராட்சி 2022 சாதாரண உள்ளாட்சி தேர்தல் பணிக்கு தேவையான வாக்குச் சாவடி பொருட்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.39950/2021/ஊவ.14, நாள் 02.12.2021ல் அனுமதிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் ஸ்டேசனரி பொருட்கள் சென்னை பிரிண்டிங் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் கூட்டுறவு சொசைட்டி அவர்களிடம் வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு

1)தேர்தல் பணியில் அவசர அவசியத்தை முன்னிட்டு அரசு கூட்டுறவு பண்டக சாலையில் உடனடி தேவைக்காக வாங்கி பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2)தேர்தல் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொருட்கள் வாங்கி பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம். (உத்தேச செலவு ரூ.1,00,000/–)

ந.க.எண்.435/2021/பி1.

**தீர்மானம் எண்.2399:** **அனுமதிக்கப்பட்டது.**

5) திருமங்கலம் நகராட்சி 2022 சாதாரண உள்ளாட்சி தேர்தல் பணிக்கு வாக்காளர் துணைப் பட்டியல் மற்றும் வாக்குச் சாவடி சீட்டுகள் அச்சிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | வாக்காளர் துணைப் பட்டியல் | | வாக்குச் சாவடி சீட்டுகள் |
|---|---|---|---|---|
| | | ஒருபக்கம் | இரண்டு பக்கம் | |
| 1 | வேலன் விளம்பரம், மதுரை | 0.60 | 0.75 | 0.75 |
| 2 | கற்பகா கம்ப்யூட்டர்ஸ், மதுரை | 0.65 | 0.80 | 0.80 |
| 3 | நாராயணா ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை | 0.70 | 0.85 | 0.85 |

அ.கு

1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வேலன் விளம்பரம், மதுரை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2)தேர்தல் பணி அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.435/2021/பி1.

**தீர்மானம் எண்.2400: அனுமதிக்கப்பட்டது.**

6)திருமங்கலம் நகராட்சி 2022 சாதாரண உள்ளாட்சி தேர்தல் பணிக்கு தபால் வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குச் சீட்டு கருவிக்கு தேவையான சின்னங்கள் அச்சிட்டு வழங்க 08.02.2022ம் நாள் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| | | |
|---|---|---|
| 1 | தேவா கார்டு மற்றும் ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை | ரூ.25650/– |
| 2 | சார்ப் ஆப்செட் பிரிண்டர்ஸ், மதுரை | ரூ.27,000/– |

அ.கு

1)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மதுரை தேவா கார்டு மற்றும் ஆப்செட் பிரிண்டர்ஸ் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2)தேர்தல் பணி அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.435/2021/பி1.

**தீர்மானம் எண்.2401: அனுமதிக்கப்பட்டது.**

7)தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக அறிவிக்க தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிட்டு பொதுமக்களின் ஆட்சேபணை எதுவும் இருப்பின் 15 தினங்களுக்குள் வழங்க தெரிவித்து ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு விளம்பரக் கட்டணம் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1) அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

8) திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் 2.0வின்கீழ் குப்பை இல்லாத நகராட்சியாக மாற்றம் செய்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் குப்பை இல்லா நகராட்சி (Garbage Free City 3 star ) சான்றிதழ் பெறுவதற்கு 15 தினங்களுக்குள் ஆட்சேபணை எதுவும் இருப்பின் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திட தனிஅலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1) அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2402: அனுமதிக்கப்பட்டது.**

9)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ள கொசுப்புழுவினை அழிக்கும் பொருட்டு தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் நிறுவனம் மூலம் 60 பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளும் பணிக்கு 01.01.2019 முதல் 31.012.2021 வரை 3 வருடகாலத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட ஒப்பந்த காலமானது 31.12.2021 அன்றுடன் முடிவடைவதால் காலநீட்டிப்பு செய்து தரக் கோரி மேற்கண்ட நிறுவனம் பழைய ஒப்பந்த விகிதத்திலேயே பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளதை அடுத்து மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை ஒரு மாதகாலத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்க உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதால் மேற்கண்ட நிறுவனம் வழங்கியுள்ள பழைய விலை விகிதத்திலேயே 01.02.2022 முதல் 31.03.2022 வரை இரண்டு மாதத்திற்கு காலநீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1) அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.02.2022 முதல் 31.03.2022 வரை இரண்டு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2403: அனுமதிக்கப்பட்டது.**

10)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கொசுப்புழுவினை அழிக்கும் பொருட்டு தற்காலிக மஸ்தூர் 60 பணியாளர்கள் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 15.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் நிறுவனத்தற்கு 01.01.2018 முதல் 31.12.2021 வரை பணிமேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.12.2021 அன்று முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனம் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை ஒரு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து வழங்கக் கோரி சம்மதக் கடிதம் வழங்கியுள்ளது. அதன்படி மேற்கண்ட நிறுவனம் வழங்கியுள்ள பழைய ஒப்பந்த விகிதத்திலேயே 30 பணியாளர்களைக் கொண்டு பணி 01.01.2022 முதல் 31.01.2022 வரை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.</u>

1) அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.02.2022 முதல் 31.03.2022 வரை ஒரு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2404:** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

11)திருமங்கலம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.6,7,8,9,14 மற்றும் இதர பகுதிகளில் தனியார் மூலம் 80 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளும் பணிக்கு ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் நிறுவனம் மூலம் 15.11.2018 அன்று வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 01.01.2018 முதல் 31.12.2021 வரை 3 வருட காலம் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.12.2021 அன்றுடன் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒருமாத காலம் கால நீட்டிப்பு செய்து 01.01.2022 முதல் 31.01.2022 வரை பணி உத்தரவு வழங்கப்பட்ட நிலையில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்க உள்ளதாலும், தற்சமயம் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள சம்மதக் கடிதம் சமர்ப்பித்துள்ளது. அதன்படி பழைய ஒப்பந்த விலை விகிதத்தில் 01.02.2022 முதல் 31.03.2022 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.</u>

1) அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.02.2022 முதல் 31.03.2022 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2405:** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

12) நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழஙகுவதில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள். 21.09.2009–ன் பிரகாரம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணத்தில் ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் கட்டணத்தில் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண். 2259, நாள். 25.02.2021–ன் பிரகாரம் 2021–22–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விபரப்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | **கருங்கல் சல்லி சாலை** | **தார்சாலை** | **சிமெண்ட் சாலை** |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1940/– | ரூ. 4090/– | ரூ. 4720/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3010/– | ரூ. 5180/– | ரூ. 5790/– |

தற்பொழுது 2022–23–ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்த்தி கீழ்க்கண்டவாறு திருத்திய தொகையினை நிர்ணயம் செய்திடவும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வசூல் செய்யவும் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின்படி புதிய இணைப்புகள் வழஙகவும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | **கருங்கல் சல்லி சாலை** | **தார்சாலை** | **சிமெண்ட் சாலை** |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2040/– | ரூ. 4300/– | ரூ. 4960/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3360/– | ரூ. 5440/– | ரூ. 6080/– |

**அ.கு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 2346/2012/இ1

**தீர்மானம் எண்.2406:** **அனுமதிக்கப்பட்டது.**

13)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 21191/2021/IHSDP.2 நாள். 07.10.2021 ம் தேதிய கடிதத்தில் 15வது மத்தியநிதிக்குழு மானியம் 2020–21 ன் Tied Grant மற்றும் Untied Grant ன் கீழ் தலா ரூ.1.39 கோடி வீதம் ரூ.2.78 கோடி நிதி விடுவிக்கப்பட்டு இதற்கான பணி மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 2020–21 Tied Grantன் கீழ் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் எட்டு எண்ணிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்போது 2020–21 Untied Grant ன் கீழ் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் கீழ்காணும் பதினொன்று எண்ணிக்கை பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 16 | Supply and fixing of 62.5 KVA Generator with roofing arrangements @ Sholavandhan road Sandhaipettai Tank in W.No.16 @ Tirumangalam Municipality | 9.30 |
| 2 | | CC Charges for Street light paid to TANGEDCO in Tirumangalam Municipality | 46.00 |
| 3 | 10,12,13,14,15 & 26 | Providing & Laying Interlock concrete paverblock & CC Pavement for Water supply damaged roads @ Munisif Court Road in W.No 10,12,13 (R348,352,361), Arumugam North 2nd street (R231) and Arumugam Middle 12th street in W.No.8 (R220), Rajaji 1st street in W.No.12 (R355) , Chinnakadaiveedhi in W.No.22 (R478), South Street in W.No.26 (R503) @ Tirumangalam Municipality | 7.00 |
| 4 | 14 | Construction of Storm Water Drain @ Sengulam East 3rd Street in Ward No.14 (R432) @ Tirumangalam Municipality | 5.00 |
| 5 | 8 | Construction of Culvert @ Arumugam Main road in Ward No.8 (R260) @ Tirumangalam Municipality | 0.60 |
| 6 | | Water Charges paid to TWAD Board in Tirumangalam Municipality | 53.00 |
| 7 | 16 & 26 | Replacement of Pumps,Motors & Cables @ South street Sewerage Pumping Station and Supply & erection of Motors , Cables, Valves @ Sandhaipettai Sump in W.No.16 & 26 | 5.60 |
| 8 | 5 | Providing Cement Concrete Pavement for Water supply damaged roads @ Jawahar Nagar 12th street in W.No.5 (Unicode R128 & R129) | 5.20 |
| 9 | 26 | Providing & Laying Interlock concrete paverblock with Storm Water Drain @ South street east cross street Opposite side of Community Toilet in W.No.26 (Unicode R 505) | 6.00 |
| 10 | 10 | Providing & Laying Interlock concrete paverblock with Storm Water Drain @ Munisif court road OHT (Municipal office Premises) in W.No.10 (R348) | 7.30 |
| 11 | 10,16 & 26 | Replacement of UG cables and Providing Sewage pipeline arrangement,Electrical arrangements @ Virudhunagar road MCC, Usilai road MCC, South street MCC and Municipal office in W.No.10,16 & 26 | 2.00 |
| | | Total | **147.00** |

மேற்காணும் பணிகளில் வரிசை எண். 2 மற்றும் 6 க்கு மின்வாரியம் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சியால் செலுத்த வேண்டிய கட்டணத்தை ஈடு செய்வதற்கும் ற்றும் வரிசை எண். 1 , 3 முதல் 5 மற்றும் 7 முதல் 11 வரையிலான ஒன்பது எண்ணிக்கை பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மானிய நிதியினைக் காட்டிலும் கூடுதல் செலவினம் ரூ. 8.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஈடு செய்து கொள்ளலாம்.

**ந.க.எண்.75/2021/இ1**

**தீர்மானம் எண்.2407:** **அனுமதிக்கப்பட்டது.**

14)திருமங்கலம் நகராட்சி 15வது மத்தியநிதிக்குழு மானிய நிதி 2021–22 Tied Grant ன் கீழ் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் FSTP க்கு சுற்றுச்சூழல் கட்டும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 5044/2021/பி2, நாள். 13.12.2021–ல் பணிக்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதனை தொடர்ந்து பணிக்கான மதிப்பீட்டிற்கும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க. எண். 5044/2021/பி2, நாள். 15.12.2021–ல் தொழில் நுட்ப அனுமதி வழஙகப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 21.01.2022–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.மோகன், திருமங்கலம் மற்றும் திரு.வி.பி.கணேசன், திருமங்கலம் ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியார்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 24.01.2022–ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. திரு. டி. மோகன்,<br>25, ஆறுமுகம் நடுத்தெரு 5,<br>திருமஙகலம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.89 சதவீதம் அதிகம் |
| 2. திரு.வி.பி.கணேசன்,<br>திருமஙகலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.11 சதவீதம் அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.மோகன், திருமங்கலம் என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 27.01.2022–ம் தேதிய சம்மதக்கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.60 உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மேற்காணும் பணி திட்டப்பணியாக இருப்பதால் உரிய காலத்திற்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும் தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.72–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழஙகலாம்.

2. அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், திட்டப்பணியினை குறித்த காலத்தில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி கூடுதல் விலைவிகிதத்தினை ஏற்பதால் ஆகும் மிகை செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ளவும், திருத்திய வரவு–செலவு திட்டத்தில் வகைப்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 1983/2021/இ1**
**தீர்மானம் எண்.2408:** **அனுமதிக்கப்பட்டது.**

15) திருமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படும் BOV வாகனம் பழுது நீக்கம் செய்ய **30.12.2021** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் பெயர் | Karthika Prompt Service Solar power solution Rs. | JK Enterprises Rs. |
|---|---|---|---|
| 1 | Acceletor | 625 | 750 |
| 2 | Head Light, Indicator switch | 275 | 350 |
| 3 | Horn Switch | 275 | 350 |
| 4 | Speedo meter | 650 | 725 |
| 5 | Head Light | 857 | 975 |
| 6 | Horn | 120 | 200 |
| 7 | Fork bearing | 465 | 565 |
| 8 | Stock absorber ‘T’ with nut | 5525 | 6500 |
| 9 | Stock absorber | 1780 | 2000 |
| 10 | Mudguard | 225 | 325 |
| 11 | Front tyre with tube | 2650 | 3650 |
| 12 | Front axle with nut | 225 | 325 |
| 13 | Front Indicator | 525 | 625 |
| 14 | Indicator relay | 160 | 260 |
| 15 | Wirig kit | 3737 | 4000 |
| 16 | Control Box | 7025 | 8025 |
| 17 | Control Box Service | 2500 | 3200 |
| 18 | DC convertor | 750 | 900 |
| 19 | Reverse horn | 350 | 475 |
| 20 | Reverse horn relay | 250 | 325 |
| 21 | Motor | 7260 | 8200 |
| 22 | Back tyre with tube | 2950 | 3550 |
| 23 | Back wheel Axle | 1600 | 2400 |
| 24 | Break shoe | 350 | 475 |
| 25 | Back wheel bold with nut | 60 | 375 |
| 26 | Back wheel bearing | 250 | 90 |
| 27 | Rim | 1800 | 2200 |
| 28 | Differential gear | 6000 | 7250 |
| 29 | Back Indicator set | 450 | 575 |
| 30 | Break rod bolt nut | 155 | 225 |
| 31 | Handle Bar | 450 | 575 |
| 32 | Hand break assembly | 650 | 750 |
| 33 | Hand break cable | 60 | 90 |
| 34 | Driver seat | 650 | 775 |
| 35 | MCB | 380 | 500 |
| 36 | Charge new | 5500 | 5800 |
| 37 | Charger service | 1800 | 2200 |
| 38 | Wire connector | 150 | 200 |
| 39 | Battery 40HH 1 set – 5 Nos. | 30000 | 32000 |

| | | | |
|---|---|---|---|
| 40 | Battery Tormind (1 set 10 nos.) | 870 | 930 |
| 41 | Battery wire | 100 | 150 |
| 42 | Kamini with Bush (1set 2 nos) | 1150 | 1300 |
| 43 | Tincker work per kg | 160 | 200 |
| 44 | Painting | 2250 | 3000 |
| 45 | Motor service | as per work 1000 | as per work 2000 |
| 46 | Labour charge | 1000 | 2000 |

மேற்கண்ட செலவினத்திற்கு ஆகும் உத்தேச செலவனம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)கலம் எண்.3ல் கண்டுள்ள நிறுவனமான Karthika Prompt Service Solar power solution நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதை ஏற்று பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2409: அனுமதிக்கப்பட்டது.**

16)திருமங்கலம் நகராட்சி 2021–22ம் ஆண்டிற்கு அலுவலக தேவைக்கான ஏ4 பேப்பர் சப்ளை செய்ய 09.12.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் | தொகை<br>ரீம் ஒன்றுக்கு விலை |
|---|---|---|
| 1 | கருகப்பிள்ளை ராஜேந்திரா சூப்பர் மார்க்கெட், மதுரைரோடு, திருமங்கலம் | ரூ.230 |
| 2 | அர்ச்சணா பிளாசா, பி.கே.என்.காம்ப்ளக்ஸ், திருமங்கலம் | ரூ.225 |
| 3 | ஜி.சக்திமுருகன், விருதுநகர் ரோடு, திருமங்கலம். | ரூ.220 |

அ.கு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜி.சக்திமுருகன், விருதுநகர் ரோடு, திருமங்கலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.1246/2021/பி2

**தீர்மானம் எண்.2410: அனுமதிக்கப்பட்டது.**

17)எதிர்வரும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் மற்றும் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் 'ஏ4' அளவுள்ள வெள்ளைக் காகிதங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ற அளவில் திருமங்கலத்தில் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1246/2021/பி2

**தீர்மானம் எண்.2411: அனுமதிக்கப்பட்டது.**

18) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (NS) அரசாணை (MS) எண்.92 நாள். 30.10.2021-ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் () 2021-22-ன் கீழ் பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி வார்டு எண்.1 முகமதுஷாபுரம் கிழக்கு தெரு-4 ல் உள்ள நகராட்சி பூங்கா மேம்பாட்டு பணியை ரூ.46.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க. எண். 3539/2021/2, நாள். 17.11.2021-ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 10.12.2021-ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி ( ) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.வி.பி.கணேசன், உலகாணி மற்றும் திரு.ஏ.ராமசாமி, திருமங்கலம் ஆகிய இருவரின் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியார்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் ( ) 13.12.2021-ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. திரு.வி.பி.கணேசன்<br>ஒப்பந்ததாரர்<br>உலகாணி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.89% அதிகம் |
| 2. திரு.ஏ.ராமசாமி,<br>ஒப்பந்ததாரர்<br>திருமங்கலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.16% அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள. திரு.வி.பி.கணேசன், உலகாணி, என்பவரின் மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் ( ) கோரியதில் மேற்படியார் தனது 14.12.2021ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.50% உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது, தனிஅலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்காணும் திட்ட பணியினை முழுவதுமாக விரைவில் முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2-ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், திட்டப்பணியினை குறித்த காலத்தில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், மன்றம் அங்கீகரிக்கலாம்
3. ஒப்பந்தப்புள்ளி கூடுதல் விலைவிகிதத்தினை ஏற்பதால் ஆகும் மிகை செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ளவும், திருத்திய வரவு-செலவு திட்டத்தில் வகைப்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1514/2021/இ1

**தீர்மானம் எண்.2412:** **அனுமதிக்கப்பட்டது.**

19)2022–23ம் நிதியாண்டிற்கு திருமங்கலம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் மற்றும் பணமதிப்பு படிவங்கள் ஆகியவற்றை அவ்வப்போது தேவைப்படும் அளவிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சக நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.258/பி2/2022

**தீர்மானம் எண்.2413: அனுமதிக்கப்பட்டது.**

20)திருமஙகலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு குப்பை அள்ள பயன்படுத்தப்படும் TN-AZ6184 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி 21.03.2022 அன்று கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Tirumangalam Agro Engineering Service Co-op Center Ltd., | **96878** |
| 2 | MD(Spl)-204, Chellampatti Agro Engineering and Service Co-operative Center Ltd., | **99238** |

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளி வழஙகியுள்ள Tirumangalam Agro Engineering Service Co-op Center Ltd., நிறுவனத்திற்கு வழங்கியதையும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2414: அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்/ ஆணையாளர்,
திருமஙகலம் நகராட்சி.